## வேம்பு...

## தோப்பாக வளர்த்தால், தப்பாத வருமானம் !

பொதுவாக மரம் வளர்ப்புக்கு மாறும் விவசாயிகள்... மரவேலைப்பாடுகளுக்குப் பயன்படக்கூடிய தேக்கு, குமிழ், தோதகத்தி.... என்றுதான் தேர்வு செய்வார்கள். ஆனால், நீண்டகாலத்திற்கு உறுதித் தன்மையுடன் திகழக்கூடிய நாட்டு வேப்ப மரத்தை பெரிதாக யாரும் கண்டு கொள்வதில்லை. ஆனால், மிக எளிதாக சாகுபடி செய்யக்கூடிய, எல்லா வகையான மண்ணிலும் சிறப்பாக விளையக்கூடிய மருத்துவ குணமுடைய வேம்புக்கும் நல்ல தேவை உள்ளது என்பது தான் உண்மை!

இது பற்றி சில விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார், மரம் வளர்ப்பில் ஆழ்ந்த அனுபவம் கொண்ட தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை, வேளாண்மை ஆசிரியர், பாலசுப்ரமணின். "இது, வறட்சியைத் தாங்கி வளரும். இலை, காய், பட்டை எல்லாமே மருத்துவ குணம் உடையது. கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படும். பூச்சித் தாக்குதல்களைச் சமாளிக்க, வேப்பம் பிண்ணாக்கு, வேப்பெண்ணெய், வேப்பிலை அதிகளவில் பயன்படுகிறது. இதையெல்லாம்விட இந்த மரத்திலும் மர வேலைப்பாடுகள் செய்யலாம். கதவு, நிலை, ஜன்னல் செய்ய இந்த மரம் பயன்படுகிறது.

வேப்ப மரத்தை தோப்பாக வளர்த்தால், நிச்சய லாபம்தான். நடவுபோட்ட 6-ம் வருடத்திலிருந்து வேப்பங்கொட்டைகள் கிடைக்கும். இதை சேகரித்து அரைத்தால் எண்ணெயும், வேப்பம்பிண்ணாக்கும் கிடைக்கும். 15 வருடம் வளர்ந்த மரங்களைத்தான் வேலைப்பாட்டுக்குப் பயன்படுத்துவார்கள். அந்தளவு வயதுள்ள மரங்கள் நல்ல விலைக்குப் போகும். குறைவான எண்ணிக்கையில் மரங்களை வளர்க்கும் போது கவாத்து செய்ய மாட்டோம். அதனால், பழங்கள் அதிகமாக கிடைக்கும். இந்த மரங்கள், வளைந்து, நெளிந்து இருப்பதால், குறைவான பகுதியைத்தான் வேலைப்பாடுகளுக்கு பயன்படுத்த முடியும். இதுவே தோப்பாக வளர்க்கும்போது கவாத்து செய்வதால் பழங்கள் அதிகளவில் கிடைக்காது. ஆனால், மரங்கள் நேராக வளர்வதால் வேலைப்பாடுகளுக்குப் பயன்படும்" என்று யோசனைகளைச் சொன்னார்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே உள்ள சூரியவிடுதி கிராமத்தைச் சேர்ந்த கருப்பையா, விவசாயிகளிடமிருந்து மரங்களை வாங்கி.. கட்டில், பீரோ, மேஜை, நாற்காலி,

ஜன்னல் உள்ளிட்ட பொருட்களைத் தயார் செய்து விற்பனை செய்கிறார். இவரிடம் பேசியபோது, “தரமா வளர்த்தா 6 வருடத்தில் 2 அடி சுற்றளவு 10 அடி உயரத்திற்கு மரம் வளர்ந்துவிடும். இந்த வயது மரங்களில் ‘ரேகை இருக்காது. அதனால், சின்னசின்ன சாமான் செய்யத்தான் உபயோகப்படும். இந்த வயதில் ஒரு மரத்தை 2 ஆயிரம் ரூபாய் விலை வைத்து வாங்குவோம். 10 வருடத்தில், 15 அடி உயரம் வரை மரம் வளர்ந்துவிடும். சுற்றளவு 5 அடி வரைக்கும் இருக்கும். இந்த மரங்களில் ரேகை ஓட ஆரம்பித்திருக்கும். 15 வருடத்தில் 20 அடி உயரத்திற்கு வளர்ந்து 6 அடி வரை சுற்றளவு இருக்கும். ரேகை நல்லா ஓடியிருக்கும். இந்த மாதிரி மரங்களை கன அடி கணக்கில் விலைக்கு வாங்குவோம். ஒரு கன அடி 400 ரூபாயிலிருந்து, 600 ரூபாய் வரை விலை கொடுப்போம். வெட்டுக்கூலி, போக்குவரத்துச் செலவையெல்லாம் நாங்களே ஏற்றுக் கொள்வோம் என்றார், கருப்பையா.

தஞ்சாவூர் வல்லம் பகுதியில் வேப்பம் பிண்ணாக்கு அரைப்பதற்கு என்றே, பிரத்யேக ஆலை நடத்தி வரும் கோவிந்தராஜன், “நாங்களே 10 வேப்பமரம் வைத்திருக்கிறோம். பழங்களைக் காய வைத்து, அரைத்து எண்ணெய் எடுக்காத பிண்ணாக்கு கிலோ 18 ரூபாய் என்று விற்பனை செய்கிறோம். மத்தவங்க கொடுக்கும் கொட்டைகளையும் கூலிக்கு அரைத்துக் கொடுக்கிறோம். ஆறு வயது மரத்தில் ஒரு வருடத்திற்கு 100 கிலோவிலிருந்து 150 கிலோ வரை பழங்கள் கிடைக்கும். தொடர்ந்து மகசூல் அதிகரித்து, 10 வருடத்திற்குப் பிறகு, 300 கிலோ பழங்கள் கிடைக்கும். 100 கிலோ வேப்பம்பழத்தை மூன்று நாள் வெயிலில் காய வைத்தால்... 90 கிலோ காய்ந்த பழம் கிடைக்கும். இதை அரைத்தால்... 86 கிலோ எண்ணெய் எடுக்காத வேப்பம்பிண்ணாக்கு கிடைக்கும் என்றார்.

நிலத்தடி நீரைச் சுத்திகரிக்கும் வேம்பு!

திருச்சி – நாமக்கல் சாலையில் உள்ள மேற்கு நாயக்கன்பட்டி கிராமத்தில் 40 ஏக்கரில் வேப்ப மரங்களை வளர்த்து வரும் சத்திய மூர்த்தி, “இங்கு 3 ஆயிரத்து 500 மரங்கள் வளர்க்கிறோம். ஆசிட் தொழிற்சாலை கழிவால் நிலத்தடி நீர் மிகவும் பாதித்திருக்கிறது. வேப்பந்தோப்பு உருவான பிறகு, நிலத்தடி நீரில் கலந்திருந்த ரசாயனத் தன்மை கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது. ஏராளமான பறவைகள் வந்து போகிறது. சுண்ணாம்புத் தன்மை அதிகமாக இருக்கும் இந்த மண்ணில்கூட 7 வருடத்தில் 20 அடி உயரம் வரை மரங்கள் வளர்ந்திருக்கு. மூன்று வருடமாக கடுமையான வறட்சியால் மரங்களுக்கு கொஞ்சம் கூட தண்ணீர் கொடுக்க முடியாமப் போயிடுச்சு. ஆனாலும் கூட, மரங்கள் பட்டுப் போகாமல், உயிர் புடிச்சி நின்னுட்டு இருக்குது என்றார்.

இப்படித்தான் சாகுபடி செய்யணும்…!

வேப்ப மரங்களை தோப்பாக சாகுபடி செய்யும் விதம் பற்றி பாலசுப்ரமணியம் விவரித்த விஷயங்கள்…

வேப்ப மரங்களுக்கு தண்ணீர் தேங்காத நிலமாக இருப்பது நல்லது. வரிசைக்கு வரிசை 10 அடி, செடிக்குச் செடி 10 அடி இருக்குமாறு 2 அடி அகலம், 2 அடி ஆழம் இருக்குமாறு, சதுர வடிவில் குழிகள் எடுக்க வேண்டும். ஒரு ஏக்கரில், சுமார் 440 குழிகள் வரை எடுக்கலாம். அதிக இடைவெளி விடும்போது மரம் நேராக வளராது. பக்கக் கிளைகளும் அதிக அளவில் உருவாகி, மரத்தின் தரம் குறைந்துவிடும். ஒவ்வொரு குழியிலும் 20 கிலோ சாணம், 100 கிராம் வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து நிரப்பி, கன்றுகளை நடவு செய்ய வேண்டும். மாதத்திற்கு இரண்டு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மழைக்காலங்களில் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

நடவு செய்த முதல் 3 ஆண்டுகளுக்கு ஊடுபயிர்கள் சாகுபடி செய்யலாம். முதல் ஆண்டு… உளுந்து, தட்டைப்பயறு, பச்சைப்பயறு, கொள்ளு உள்ளிட்ட பயறு வகைகளையும், 2, 3-ம் ஆண்டுகளில் சிறுதானியங்களையும் சாகுபடி செய்யலாம். ஊடுபயிர் சாகுபடி செய்யும் சமயத்தில் வேப்பங்கன்றுகளுக்குத் தனியாக இடுபொருள் கொடுக்கத் தேவையில்லை. ஊடுபயிர் சாகுபடி செய்யவில்லையென்றால், ஆண்டுக்கு ஒரு முறை ஒவ்வொரு மரத்தைச் சுற்றிலும் 10 கிலோ சாணம் இட வேண்டும்.

மரங்கள் ஓரளவுக்கு வளர்ந்ததும், மரத்தின் மொத்த உயரத்தில், மூன்றில் ஒரு பங்கு உயரம் வரை உள்ள கீழ்ப்பகுதி கிளைகளை மட்டும் மரத்திலோ, தண்டுப்பகுதியிலோ காயம் எற்படாதவாறு கவாத்து செய்ய வேண்டும். கவாத்து செய்த பகுதிகளில், நாட்டுப் பசுவின் சாணத்தைப் பூசி வைத்தால் கிருமிகள் தொற்றாது. ஒட்டுண்ணிகள் ஏதேனும் கிளைகளில் படர்ந்தால், கிளையோடு வெட்டி, அப்புறப்படுத்த வேண்டும். மரங்கள் ஓரளவுக்கு வளர்ந்த பிறகு, குறுக்கு நெடுக்குமாகு செல்லக்கூடிய கிளைகளை வெட்டிவிட வேண்டும். நேராக செல்லக்கூடிய கிளைகள் மட்டுமே, மரத்தில் இருக்க வேண்டும்.

6-ம் ஆண்டில் ஒன்றுவிட்டு ஒன்று என 220 மரங்களை மட்டும் வெட்டி, விற்பனை செய்ய வேண்டும். 10-ம் ஆண்டில் ஒன்றுவிட்டு ஒன்று என 110-ம் மரங்களை வெட்டி, விற்பனை செய்ய வேண்டும். 15-ம் ஆண்டு, மீதியுள்ள 110 மரங்களை விற்பனை செய்யலாம்.

வேப்பமர விற்பனை மூலமாகக் கிடைக்கும் (உத்தேச) வருமானம்

| **காலம்** | **எண்ணிக்கை** | **சராசரி வலை (ரூபாய்)** | **மொத்தம்** |
|---|---|---|---|
| 6-ம் ஆண்டு | 220 மரங்கள் | 1,500 (ஒரு மரம்) | 3,30,000 |
| 10-ம் ஆண்டு | 110 மரங்கள் | 7,500 (ஒரு மரம்) | 8,25,000 |
| 15-ம் ஆண்டு | 110 மரங்கள் | 10,000 (ஒரு மரம்) | 11,00,000 |
| மொத்தம் | | | 22,55,000 |

7-ம் ஆண்டிலிருந்து ஒரு மரத்தில் 50 கிலோ வேப்பம்பழம், கிடைக்கும் என்று வைத்துக் கொண்டால்….ஆறாம் ஆண்டு வெட்டிய மரங்கள் போக, மீதி இருக்கும் 220 மரங்களில் இருந்து 11 ஆயிரம் கிலோ வேப்பம்பழம் கிடைக்கும். இதனை காய வைத்து, அரைக்கும்போது, 9 ஆயிரத்து 900 கிலோ வேப்பம் பிண்ணாக்கு கிடைக்கும். ஒரு கிலோ 18 ரூபாய் வீதம், 1 லட்சத்து 78 ஆயிரத்து 200 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் அரவைக் கூலி 55 ஆயிரம் ரூபாய் போக, நிகர லாபமாக 1 லட்சத்து 23 ஆயிரத்து 200 ரூபாய் நிற்கும்.

10 ஆண்டுகளுக்கு மேல் 110 மரங்களை வெட்டினாலும், அந்த சமயங்களில் மகசூல் அதிகரிப்பதால், இதே அளவு மகசூல் கிடைக்க வாய்ப்புண்டு. இந்த வருமானத்திலேயே தோட்டத்தைப் பராமரித்து விடலாம். மரங்களை விற்கும் போது கிடைக்கும் வருமானம் அனைத்தும் லாபக் கணக்கில் சேர்ந்துவிடும்.

தொடர்புக்கு

பாலசுப்ரமணியன், செல்போன் : 94864 -08384

கருப்பையா, செல்போன் : 97866-92346

கோவிந்தராஜன், செல்போன் : 84285-61614

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.09.2014 www.vikatn.com**